ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2021 செத்தெம்பர் 09 |

# உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடனான மற்றும் தேசிய சேமிப்பு வங்கியுடனான நாணயக் கடிதங்களின் அத்துடன் ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியமற்ற/ அவசரமற்ற பொருட்களின் இறக்குமதிக்கெதிரான எல்லை வைப்புத் தேவைப்பாடு

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை 2021 செத்தெம்பர் 08 அன்று இடம்பெற்ற அதன் கூட்டத்தில் உடனடியாகச் செயற்படும் வகையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடனான மற்றும் தேசிய சேமிப்பு வங்கியுடனான நாணயக் கடிதங்களின் அத்துடன் ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியமற்ற/ அவசரமற்ற பொருட்களின் இறக்குமதிக்கெதிராக 100 சதவீத காசு எல்லை வைப்புத் தேவைப்பாட்டினை விதிப்பதற்குத் தீர்மானித்துள்ளது. காசு எல்லை வைப்புத் தேவைப்பாட்டினை விதிப்பதற்கான தீர்மானம், குறிப்பாக, ஊகவியாபாரத் தன்மையிலான மிதமிஞ்சிய இறக்குமதிகளை ஊக்கமிழக்கச்செய்வதன் வாயிலாக செலாவணி வீத உறுதிப்பாட்டினையும் வெளிநாட்டு நாணயச் சந்தை திரவத்தன்மையினையும் பாதுகாப்பதற்காக முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்குத் துணையளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

காசு எல்லை வைப்புத் தேவைப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள உற்பத்தி வகைகளின் தொகுப்பு 2019, 2020 மற்றும் 2021 இன் இதுவரையிலும் (தற்காலிகமானவை) ஒவ்வொரு வகையின் கீழுமான இறக்குமதிச் செலவினம் பற்றிய தகவல்களுடன் சேர்த்து கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

**100% காசு எல்லை வைப்புத் தேவைப்பாடுகளுக்கு உட்படுத்தப்படுகின்ற அத்தியாவசியமற்ற/ அவசரமற்ற இறக்குமதிகளின் தொகுப்பு**

| உற்பத்தி விபரம் | எச்எஸ் குறியீட்டு இலக்கம் | இறக்குமதிப் பெறுமதிகள் (ஐ.அ.டொலர். மில்) | | |
|---|---|---|---|---|
| | | **2019** | **2020** | **சன-யூலை 2021** |
| தொலைத்தொடர்புச் சாதனங்கள் (செல்லிடத் தொலைபேசிகள் மற்றும் நிலையான தொலைபேசிகள் போன்றவை) | 5 | 247.3 | 268.4 | 250.3 |
| வீட்டுச் சாதனங்கள் (மின்விசிறிகள், தொலைக்காட்சிப்பெட்டிகள், குளிர்சாதனப்பெட்டிகள், சலவை இயந்திரங்கள், டிஜிட்டல் புகைப்படக் கருவிகள், தலைமுடிக் கௌவிகள், சூடாக்கிகள், விளக்குகள், அனல் அடுப்பு போன்றவை) | 82 | 203.8 | 171.7 | 160.6 |
| அணியும் ஆடை மற்றும் துணைப் பொருட்கள் (குழந்தைகளுக்கான ஆடைகள், உள்ளாடை, விளையாட்டு உடைகள், இரவு ஆடைகள் மற்றும் பிஜாமாக்கள், மேலங்கிகள், சேட் மற்றும் பிளவுஸ், முழு உடை, விளையாட்டுக்கு அணியும் உடை மற்றும் நீச்சலுடை, ரி-சேர்ட், உள்ளாடை, பாதணி, மணிக்கூடுகள், வெயிலுக்கு அணியும் கண்ணாடி மற்றும் ஏனைய துணைப் பொருட்கள் போன்றவை) | 266 | 162.6 | 129.9 | 102.3 |
| வீட்டு மற்றும் தளபாடப் பொருட்கள் (தளபாடம், விளக்குகள் மற்றும் விளக்குப் பொருத்துகள், அலங்காரப் பொருட்கள், மேசைப்பொருட்கள் மற்றும் சமையலறைப் பொருட்கள், கட்டில் விரிப்புகள் போன்றவை) | 121 | 103.5 | 77.6 | 63.8 |
| இறப்பர் ரயர்கள் | 10 | 42.2 | 28.5 | 40.1 |
| வாயுச் சீராக்கிகள் | 15 | 50.4 | 43.0 | 34.4 |
| பழவர்க்கங்கள் (உடன் அப்பிள், திராட்சை, தோடம்பழம் மற்றும் உலர்த்திய பழங்கள், பழரசங்கள் போன்றவை) | 11 | 65.5 | 50.1 | 33.6 |
| ஒப்பனைப் பொருட்கள் மற்றும் மலசலகூடப் பொருட்கள் (வாசனைப் பொருட்கள், ஒப்பனைத் தயார்படுத்தல்கள் போன்றவை) | 23 | 34.8 | 22.6 | 19.9 |
| குடிவகைகள் (பியர், வையின், கனிமக் குடிநீர் மற்றும் ஏனைய குடிவகைகள் போன்றவை) | 24 | 58.0 | 27.7 | 11.8 |
| ஏனைய உணவு மற்றும் குடிவகைகள் (தானியத் தயார்படுத்தல்கள், மாவுச் சேர்க்கை, சொக்லேட், முளைத் தானியம், மீன் துண்டங்கள், பாலாடைக் கட்டி, வெண்ணெய் போன்றவை) | 36 | 43.5 | 33.9 | 26.5 |
| ஏனைய உணவல்லா நுகர்வுப் பொருட்கள் (இசைச் சாதனங்கள், புகையிலைப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், காகிதாதிகள் போன்றவை) | 30 | 46.4 | 17.8 | 10.1 |
| **மொத்தம்** | **623** | **1,057.9** | **871.2** | **753.4** |